CONVERSATION OF THE TAHEITANS

[A Tract of 12 pages, containing a short description of the former immoral character and idolatrous practices of the inhabitans of the South Sea Islands, together with the change wrought among them by the introduction of the Gospel.]

தகைத்தியந் தீவகத்தார்

சரித்திரம்.

இவ்விடத்துக்குத் தூரமான தென்கிழக்குச் சமுத்திரத்திலே பலபல வஸ்துக்களாலே மிகவுஞ் செழிப்புள்ள தகைத்தி ஐமெயோ முதலான சில தீவுகள் இருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒவ்வொன்று பதிபல நாடாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு அதிகாரியுண்டு. அந்த அதிகாரிகளெல்லாருக்கும் பிரபுவாக மேலே ஒரு இராசா ஆளுகைசெய்கிறான்.

அந்த இராசாவுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யும்பொழுது நரபலிகளைச் செலுத்தி அதேக வீண் சடங்குகளையுஞ் செய்து முடிக்கூட்டி வைப்பார்கள். அந்த இராசாவுக்கொரு தியாயப்பிரமாணமில்லாதிருல் அவர்கள் தங்கள் இட்டப்படி குடிசனங்களுடைய ஆஸ்தி

2th. Ed.] AMERICAN MISSION PRESS, JAFFNA. [5,000.
1843.

களையும் மனையாட்டிகளையும் பலபந்தமாய்ப் பிடித்துக்கொள்ளுவார்கள்.

அந்தத் தீவகத்தார் சருவத்தையும் படைத்த தேவன் சருவருக்கு மேலானவராயிருக்கையால் மனிதருடைய நடக்கைகளைக் காரியமென்றெண்ணாட்டாரென்று நினைத்து அவரை விட்டுத் தங்களுக்குள்ளே பராக்கிரமராயிருந்திறந்து போன மனிதரைத் தேவர்களென்றெண்ணி மரத்தாலும் கல்லாலும் விக்கிரகத்தையுண்டாக்கி வைத்துப் பூசைசெய்வதுமல்லாமல் ஓரோவென்பவனேம் யுத்தத்துக்கும் ஓரோவென்பவனைக் கள்வருக்குந் தேவர்களென்றெண்ணி யுத்தத்துக்குப்போகிறவர்கள் ஓரோவென்பவனுக்கு அநேக மனிதரைப் பலியிடுவார்கள். ஓரோவென்பவனுக்குக் கள்வராதனை செய்துவருவார்கள். அவர்கள் திருட்டுக்குப் போகும்பொழுது ஓரோவின் கோவிலுக்குப் போய் தாங்கள் திருடின பொருளிலொருபங்குமக்குக் கொடுப்போம். எங்களுக்குதவியாயிருமென்று நேர்ந்துகொண்டு போய்த் திருடி வந்து தாங்கள் திருடினதிலொரு பங்கு அந்தக் கோவிலுக்குக் கொடுப்பார்கள். மேலும் ஒவ்வொரு கோவிலிலும் இருந்த பூசாசாரிகள் அந்த விக்கிரகங்களைச் சாயுங்காலமே சரித்து நித்திரைகொள்வதுபோல வைத்து விடியற்காலமே வந்து நித்திரையிலிருந்தெழும்பினதாக நிறுத்திவைப்பார்கள். சனங்கள் அந்த விக்கிரகங்களுக்குப் பிள்ளைகளைப் பலிசெலுத்திக் காணிக்கைகளையுங் கொ

டுப்பார்கள்.

அந்தத் தீவார் மிகவுங் கோபிகளும் பில்வி சூனியக்காரரும் அதிபகாரியத்துக்காகத் தானும் பழிவாங்குகிறவர்களுமாய்த் தற்குணத்தி லே நாள்விடும்பொழுது மிகுந்த திறம்பாக்கிய சாலிருந்தார்கள். இப்பொழுதோவெனில் பரா பரன் மேல் அன்புவைத்து இயேசுக்கிறிஸ்து வை விசுவாசித்து அவர் கொடுத்த வேதத்தின் படி நடக்கையாற் பாக்கியராயிருக்கிறார்கள். அதெப்படியென்றால்,

இதற்குச் சிலகாலத்துக்கு முன்னே இங்கி லாந்தென்கிற சீர்மையிலிருக்கிறவர்களிற் சில: இவர்கள் பராபரனையும் இயேசுக்கிறிஸ்துவை யும் அறியாமலிருக்கிற செய்தியைக் கேள்விப் பட்டுப் பாவத்தை நீக்கி மனிதரை இரட்சிக் கவந்த இயேசுக்கிறிஸ்து உலகமெங்கும் போ யிச் சுவிசேஷத்தை அறிவியுங்களென்று கற்பி த்திருக்கவும் அப்படி நாஞ்செய்யாமலிருப்ப து தப்பிதமென்று மனஸ்தாபப்பட்டுக் குரு மாராகவும் உபாத்திமாராகவுஞ் சிலரை அனு ப்பினார்கள்.

அவர்கள் அந்தத் தீவுக்குட் பிரதானமாயிரு க்கிற தனைத்தியென்னுந் தீவிற் கரைசேர்ந்த வுடனே அவ்விடத்தார் வந்து இவர்களைக்கண்டு நீங்கள் வந்த காரணமேதென்று விசாரித்ததற் கு நாங்கள் பராபரனையும் இயேசுக்கிறிஸ்து வையும் அறிவிக்க வந்தோமென்றார்கள். அத ற்கு அவ்விடத்தார் பிரியப்பட்டும் அந்தத் தீவுக்கு இராசாவின் குமாரன் இந்தப் பிறதேசத்தாரை

அனுப்பிவிடவேண்டுமென்றான். அதற்கு இ
ராசா தன்மைசெய்ய வந்தவர்களை அனுப்ப
வேண்டியதென்னவென்று மதித்து அவர்கள்
வீடுகளுங் கோவில்களுஞ் சட்டிக்கொள்ள இட
ங்கொடுத்தான்.

குருமார் வீடுகளையுங் கோவில்களையுங் கட்
டுவித்து அந்தத் தீவாருடைய பாஷையிலுங்
கொஞ்சம்பயின்ற பின்பு பராபரனையும் இரட்
சகராகிய இயேசுக்கிறிஸ்துவையும் மோட்சத்
தையும் நரகத்தையும் அறிவித்து நீங்கள் நர
த்துக்குத் தப்பி மோட்சஞ்சேரப் பாவத்தை
வெறுத்துக் கிறிஸ்துவை விசுவாசியுங்களென்
று புத்திசொன்னார்கள். ஆனாலுங் கிறிஸ்து
மார்க்கம் பரிசுத்தமாயும் இராசாவுஞ் சனங்க
ளும் அசுத்தராயும் இருந்ததினால் அதைப் ப
கைத்து எதிர்மாட்டோமென்று பரிகாசம்பண்
ணினார்கள்.

அதுவுமல்லாமற் பூசாசாரிகளும் அந்தப்
போதகரைக்கொல்ல வகைதேடினார்கள். தந்
திரவித்தைக்காரரும் பில்லிசூனியக்காரரும் அ
ஞ்ஞானமார்க்கத்தை நிறுத்தும்படி அநேக அ
ற்புதங்களைச் செய்கிறோமென்று சொல்லிப்
பலபல தந்திரங்களைப் பண்ணினார்கள். இப்
படிப்பட்ட தந்திரக்காரரில் ஒருவன் ஒருநாள்
இராசாவுக்கும் மந்திரிக்கும் முன்பாக ஒரோ
வொண்பவனுமேல் ஆவேசித்துக்கொண்டவன்போ
ல வந்து நீரிப்பொழுது அடித்தமேசைமேல
பொய் யுத்தம்பண்ணவேண்டும். அப்படிச்
செய்யாதிருந்தால் தானோக்கு ஆனவிலாத மே

ணழனை வருஷிக்கப்பண்ணி உங்களெல்லாரையும் அழித்துப்போடுவேனென்றான். அப்பொழுது கிறிஸ்துமார்க்கத்தை அறிவிக்கிற குருமாரில் ஒருவரும் இராசாவோடே இருந்தார். அந்த யுத்தத்துக்கு இராசா சம்மதிக்கவில்லை. மறுநாள் அந்தக் குரு இராசாவிடத்துக்கு வந்து நேற்று உமக்கு அந்தத்தந்திரசாரன் சொன்ன மழை எங்கேயென்று கேட்டார். அப்பொழுது அந்தத்தந்திரகாரர் செய்வதெல்லாம் வஞ்சகமென்பதை இராசா அறிந்தான். மேலும் இராசமீன் அகப்பட்டால் அதை இராசாவினிடத்திற் கொண்டுவந்து காண்பித்துப் பொரித்து விக்கிரகத்துக்குப் படைத்துப் பூசாரிகளுமெடுத்துக்கொண்டுபோச்சதினை இராசாவுக்குக் கொடுக்க இராசாவும் அவனைச் சேர்ந்த சனங்களுஞ் சாட்சிடுவார்கள். பின்பு ஒருநாளொருமீனைக்கொண்டு வரும்பொழுது விக்கிரகத்துக்குக் கொடாதிருந்தால் அதென்னசெய்யுமென்பதை அறிய இராசா நினைத்து அந்த மீனைப் பொரிப்பித்து மந்திரிமாருந் தானுமாகச் சாப்பிட்டான்.

அதை அறிந்த சனங்கள் தாங்கள் நம்பினதேவன் இராசாவையும் மந்திரிமாரையுங் கொன்றுபோடுவானென்று பயந்தார்கள். மறுநாட்காலமே வந்து இராசாவுஞ் சனங்களும் யாதொரு சேதமில்லாமல் இருப்பதைக் கண்டு பிரமிப்படைந்தார்கள். அதின் பின்பு அந்த விராசா விக்கிரகபத்தி வீணென்று கண்டு அதை வெறுத்து மெய்ம்மார்க்கத்தைப் பற்றிக்கொ

ளை நினைத்தான். அதைக் கண்டு அவ்வூரிற் தலை மைக்காரருஞ் சனங்களும் இராசாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ண இராசனும் ஒளித்தோடிப்போய் வேறொரு தீவிலிருக்கையிற் றன் பாவங்களை நினைத்தான். அந்நாள் மட்டும் விக்கிரகாராதனையிலிருந்தது கேடும் மூழு மதியீனமுமென்று கண்டு தன்னுடைய நாளெல்லாம் விக்கிரகங்களை வணங்கிப் பராபரனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியினாலே பராபரனுடைய கோபமும் நித்திய ஆக்கினையும் வருமென்று பயந்து ஆறக்கூடாத துக்கங்கொண்டிருக்கையிலே குருமார் அவரிடத்திலே போய் இயேசுக்கிறிஸ்து மனுவவதாரம்பண்ணி மனிதருடைய பாவத்துக்காகத் தம்மைத்தாமே பாபப்பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறபடியினாலே அவர்மேல் விசுவாசித்தால் அவருக்காகப் பராபரன் உமக்குப் பாவத்தைப் பொறுத்தவிடச் சித்தமாவாரென்று சொன்னார்கள். இதை அந்த இராசன் கேட்டவுடனே அகங்களித்துப் பராபரனைப் பார்த்து நான் இயேசுக்கிறிஸ்துவின் மேல் விசுவாசிக்கும்படி பரிசுத்தஆவியை அருளுமென்று மன்றாடி வந்து பின்பு ஞானஸ்நானம்பெற்றுக் கிறிஸ்தவனானான்.

இந்த இராசன் ஞானஸ்நானம்பெற்று மூன்றுக அவ்விடத்தாரில் அநேகர் குருமார் சொல்லுகிற போதகத்தைக் கேட்டுவந்ததுமல்லாமற் சிலர் கிறிஸ்துவின் மேல் விசுவாசித்தும் இருந்தார்கள். இதெப்படி நடந்ததாலுற்

குருமாரிடத்திலே பணிவிடைகாரராயிருந்து அவரை விட்டுப்போன இரண்டு பேர் மெய்யான பராபரனையும் இயேசுக்கிறிஸ்துவையுங் குறித்துத் தாங்கள் கேள்விப்பட்டிருந்தபடி நினைத்துச் செபம்பண்ணிவருகையில் வேறு சிலரும் அவர்களுடனே கூடிக்கொண்டு குருமாரிடத்திலே போய் மெய்யான பராபரனை வணங்கிவருகிறவர்களாகத் தங்கள் பேரைப் புதிதாகத்திலே பதியப்பண்ணிக்கொள்ளக் கேட்டார்கள். இவ்விதமாய் வந்து சுமூகத்திலே கூடிக்கொஞ்சநாளைக்குள் இருநூறு பேர்கொண்ட ஒருசபையாய் வந்தது. இவர்கள் எங்கும் விபாபகமாயிருக்கிற பராபரனை நோக்கித் தனிமையிலுஞ் சமூகாரங்களிலுங் கூட்டங்களிலும் அடிக்கடி மன்றாடிவந்தார்கள். அவர்களுடனே அவ்விடத்திற் சில தலைமைக்காரரும் அப்படியே விசுவாசிகளாய்ச் சேர்ந்துகொண்ட பின் ஒரு விக்கிரகாராதனைக்காரக் குருவும் ஊரெங்கும் அறிய விக்கிரகாராதனையை வெறுத்து விக்கிரகங்களைச் சுட்டுப்போட்டான். இவர்கள் பராபரனுடைய ஆசீர்வாதத்திலுல் ஞானமுஞ் செல்வமும் மனப்பாக்கியமுமுள்ளவர்களானார்கள்.

அந்த இராசனுனவன் மறுபடி தலைதிரியெங்கிற தீவிலுள்ள கலகக்காரரை அடக்கிக்கொள்ளுகிறதற்குத் தானுந் தன்னோடுகூடிய செபதியானக்காரராயிருந்தவர்களுஞ் சேர்ந்து போகக் கலகக்காரரும் அந்த இராயன் கிறிஸ்தவனுய்ப் போனதை அறிந்து கடுங்கோ

பமாகி அவனையும் அவனோடு சேர்ந்திருந்த கிறிஸ்தவர்களெல்லாரையும் இராவிலேகொன்று போடவேண்டுமென்று வகைதேடினபொழுது அவர்களெல்லாரும் வானத்திலும் பூமியிலும் நிறைந்திருக்கிற சருவவல்லமையுள்ள பராபரனைப் பார்த்து மன்றாடினார்கள். அப்பொழுது அவராதி கலகந் தணிந்து இவர்களுக்கு வெற்றியுண்டாயிற்று.

இராசனெனில் தன்னோடே கலகம்பண்ணினவர்களை மூன்போதி கொடுமையாய் நடத்தாமற் கிறிஸ்துமார்க்கத்தின்படி அன்பாய் நடத்தி எல்லாருங் கிறிஸ்தவர்களாகும்படி புத்தி சொன்னான்.

மேலுங் குருமார்சொல்லுகிறவைகளை நெடுங்காலங் கேட்டும் மனந்திருப்பாமல் நாங்கள் எங்கள் பிழைப்பைத் தேடவேண்டுமென்றுசொல்லியிருந்த இவர்களுக்குப் பராபரன் கிருபை செய்து பரிசுத்தஆவியைக் கொடுத்தபடியால் அவர்கள் இராசனிடத்திலுங் குருமாரிடத்திலும் போய் நாங்கள் இரட்சிக்கப்பட என்னசெய்யவேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் உங்கள் பாவங்களை விட்டுத்திரும்பிக் கருத்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசியுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்களென்று சொன்னார்கள். அதுவுமல்லாமல் இராசனும் ஊருக்கூர் போய்ச் சனங்களுக்குப் புத்தி சொல்விச் சொல்லிவரும்பொழுதில் அவர்கள் தங்கள் விக்கிரகங்களைக் கெட்டதும் வெறுமையுமானதென்று அவமதித்துத் தள்ளி மேலானபராபரனை

யோ தங்கள் தேவனாக ஏற்றுக்கொண்டார்கள்.

இன்னமும் அந்தராசன் தன்னிடத்திலிருந்த விக்கிரகங்களையுங் குருமாரிடத்திலே அனுப்பி ஒரு சீட்டெழுதிக்கொண்டான். அதெப்படியென்றால்,

பராபரனும் நமது இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் எனது நேசமுள்ளவர்களாகிய குருமார்களுக்கு இரட்சிப்புண்டாவதாக. தங்கள் பணிவிடைகாரனுந் தலைத்தியந் தீவுக்கு இராசாவுமாகிய போமாரிராசன் எழுதிக்கொண்டது.

இப்பொழுது மெய்த்தேவனுகிய பராபரனை நாங்கள் அறிந்திருக்கிறதினாலே தலைமுறை தலைமுறையாக எங்கள் முன்னோர்கள் இடந்தி விருந்து இப்பொழுது என் வசத்தில் வந்திருக்கிற விக்கிரகங்களை நாங்கள் வணங்கி வந்த தேவர்களின் சாயலின்னவிதமென்று இங்கிலாந்திற் சனங்கள் அறிய அனுப்பி விடும்படியாய்க் கேட்டுத் தங்களிடத்துக்குக் கையளிக்கிறேன். அவைகளை அனுப்புகிறது தங்களுக்குப் பிரியமானால் அனுப்பலாம். அல்லது சுட்டுப்போடலாம். மேலும் அநேக இராசாக்களுங் குடிசனங்களும் மெய்த்தேவனை அறியாமல் இப்படிப்பட்ட விக்கிரகங்களை வணங்கிக்கெட்டுப்போனார்கள். பராபரன் எனக்குக் கிருபைசெய்யாதிருந்தால் நானும் அப்படியே கெட்டுப்போவேன். இப்பொழுதோவெனில் பராபரன் எங்கள்மேற் தயையாய்த் தமது தல் வசனங்களை அறிவித்திருக்கிறதினாற்

பொய்யான தேவர்களின் மோசத்தை அறிந்த மனப்பூரணமுஞ் சந்தோஷமுமாய் அவருக்குத் தெரிவித்து சொல்லுகிறேன். இன்னமும் பராபரன் என்மேற் கோபமாய்ப் பாராமல் இயேசுக்கிறிஸ்து இரட்சகரிடத்திற் சரணம் புகுந்திருப்பேன் என்பதுதானே.

மேலும் இந்த இரண்டு தீவிற் சனங்களுங் கிறிஸ்துமார்க்கத்தை யேற்றுக்கொண்டதை இதனடுத்த ஆறுதீவிற்சனங்களுங் கேள்விப்பட்டுத் தங்கள் விக்கிரகங்களையுஞ் சுட்டுப் பொல்லாத கிரியைகளை விட்டுக் கிறிஸ்தவர்களாகி எங்கும் பள்ளிக்கூடங்கள் வைத்து எழுதவாசிக்கப் படித்துத் தேவாராதனைக்குப் பல கோயிலுங் கட்டிப் பராபரனுடைய கற்பனைப்படி ஒய்வுநாளைக் கைக்கொண்டு நன்மையும் பாக்கியமும் நிறைந்தவர்களாளார்கள்.

இப்பொழுது அந்தச் சனங்கள் பசாசுக்குஞ் பில்லி சூனியத்துக்கும் பயப்படுகிறதில்லை. பில்லி சூனியக்காரருந் தாங்கள் செய்ததொழிலை இப்பொழுது வெறுக்கிறார்கள். முன்னே பெண்கள் கருப்பமாயிருக்கும் பொழுது அதைப் பெற்று வளர்க்க மனதில்லாதிருந்தால் மருந்து தின்று கருப்பத்தை அழித்துப் பொடுவார்கள். இப்பொழுது அவைகள் இல்லை. அவர்களுக்குள்ளே மூண்டிருந்த யுத்தங்களுங் கலகங்களும் பழிவாங்குதலும் பொய்யும் வெறியும் வம்பும் இப்பொழுதில்லை. இப்படிப்பட்ட நீதி குணங்கள் நீங்கினதுமல்லாமல் வேதபுதிய சத்தியச் சந்தோஷத்தோடே வாசித்து ஒய்வு

நாளைப் பரிசுத்தமாய் ஆசரித்துத் தேவாராதனைக்கேற்ற கோவில்களைக் கட்டுவித்து அதிலே கூடிவந்து கர்த்தாவை வணங்குகிறார்கள். முன்னே எழுத்துக்களில்லாததினால் ஒருவரும் வாசிக்கமாட்டார்கள். இப்பொழுதோ பள்ளிக்கூடங்களைக் கட்டுவித்து அநேகம்பிள்ளைகளும் வளர்ந்தவர்களும் படிக்கிறார்கள். இப்படிப்பட்டமாறுதலெல்லாம் மனிதருடைய செயலினால்லப் பராபரனுடைய செயலினால் நடந்தது.

அப்படியே பராபரன் இந்தத் தமிழருக்கும் குருமாரை அனுப்பியிருக்கிறார். இவர்களும் அந்தத் தீவிற் சனங்களைப்போலே குருமாருடைய வசனங்களைத் தள்ளி இயேசுக்கிறிஸ்துவை வணங்கமாட்டோமென்று விக்கிரகங்களை வணங்கி வீண்பதத்தியிலே பொழுது போக்கி வந்தாலும் குருமார்சொல்லுகிற புத்திக்குச் சனங்கள் காதுகொடுத்துத் தாங்கள் இரட்சிக்கப்படும்படியாக இயேசுக்கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கப் பராபரன் அவர்களை ஆசீர்வதிப்பார். எனெனில் முழங்கால் யாவும் நமக்கு முன்பாக மூடங்கும். நாவியாவும் நம்மை அறிக்கையிடுமென்று பராபரன் திருவுளம்பற்றுகிறார். ஆதலால் இவைகளெல்லாம் நிசமென்று குருமார் அறிந்து சுறுசுறுப்போடு மனிதருக்கு மெய்யான இரட்சிப்பின் வழியை யறிவித்து நீங்கள் கெட்டுப் போகாமல் அந்தவழியிலே நடவுங்களென்று புத்திசொல்லுகிறார்கள். ஆதலால் இதை வாசிக்கிறயாவரும்

உங்கள் பாவத்தை விட்டுத் திரும்பிக் குணப் பட்டு இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு பராப ரனிடத்திலே பாவப்பொறுத்தலைத் தேடக்க டவீர்கள்.

முற்றிற்று.